தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயமுத்தூர்-641011
27 OCT 2010

## சுருக்கம்

பணிக்குழு – விருதுநகர் நகராட்சி – திரு எஸ். மார்த்தாண்டன், பதிவுரு எழுத்தர் –பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (இருபதாண்டு) எண்.91** **நாள்:15.10.2010.**

**படிக்கப்பட்டன:**

1. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண்.32629/2009–ன் தீர்ப்பு, நாள் 26.06.2009.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.48085/2009/கே2, நாள் 28.08.2010.

-----

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திரு எஸ். மார்த்தாண்டன் என்பவர் விருதுநகர் நகராட்சியில் 01.06.1993 முதல் தற்காலிகத் தினக்கூலிப் பணியாளராகப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்துள்ளார் என்றும், அரசாணை (முப்பதாண்டு) எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.08.1995–ல் தமிழ்நாடு நகராட்சி பணி பொது விதிகள் 3(C) (i) மற்றும் (6)–ஐ தளர்வு செய்து அவரை பதிவுரு எழுத்தராக நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்றும், அதன்படி நகர்மன்ற நியமனக்குழு தீர்மானம் எண்.12, நாள் 20.09.1995–ன்படியும், விருதுநகர் நகராட்சி அலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.9935/95/சி1, நாள் 20.09.1995–ன்படியும் அவரை பதிவுரு எழுத்தராக நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்றும், மேலும், அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் கடிதம் எண்.32872/நப.3/97–2, நாள் 24.10.1997–ல் திரு எஸ். மார்த்தாண்டன், பதிவுரு எழுத்தரை விதிகளைத் தளர்த்தி நிரந்தரப் பணியிடத்தில் நியமனம் வழங்க ஆணை பிறப்பித்ததில் உள்ள குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு அவ்வரசாணையை ஏன் ரத்து செய்யக்கூடாது என்பதற்கான விளக்கத்தை அரசுக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டது என்றும், மேற்படி விளக்கக் கடிதத்திற்கு திரு எஸ். மார்த்தாண்டன், பதிவுரு எழுத்தர் தனது விளக்கத்தை 27.11.1997–ம் தேதி சமர்ப்பித்துள்ளார் என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும் அவர், அரசு அனுப்பிய விளக்கக் கடிதத்தினை ரத்து செய்யக் கோரியும், தனது பணியினை வரன்முறை செய்யக் கோரியும் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் அசல் மனு எண்.10427/1997–ல் வழக்குத் தொடர்ந்து தடை ஆணை பெற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார் என்றும், மேற்படி வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டு நீதிப்பேராணை எண்.32629/2006 ஆக எண்ணிடப்பட்டு அவ்வழக்கில் உயர்நீதிமன்றம் 26.06.2009–ம் நாளிட்ட தீர்ப்பாணையில், மனுதாரர் 1993–ம் ஆண்டு முதலே நகராட்சிப் பணியில் இருப்பதாலும், மனுதாரர் தொடர்ந்து

15 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வருவதாலும் அரசாணை (முப்பதாண்டு) எண்.125, நாள் 27.05.1999–ல் தினக்கூலிப் பணியாளர்களை வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளதாலும், மனுதாரர் இதிலிருந்து விதிவிலக்கு அல்ல என்பதாலும், மனுதாரர் பதில் சமர்ப்பித்துள்ளதாலும் அரசாணை (முப்பதாண்டு) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.05.1999 மற்றும் அரசாணை (நிலை) எண்.22, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 28.02.2006 ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு மனுதாரரின் பதிலின் மீது நான்கு வார காலத்திற்குள் இறுதி ஆணை வழக்கின் முதல் பிரதிவாதியான அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் வழங்க வேண்டும் எனத் தீர்ப்பளித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. உயர்நீதி மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் அடிப்படையில் பல பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்து அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலினை செய்து மனுதாரர் 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து பதிவுரு எழுத்தராகப் பணிபுரிந்து வருவதால் அன்னார் முதன்முதலில் பதிவுரு எழுத்தராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 21.09.1995–லிருந்து பதிவுரு எழுத்தராகப் பணி வரன்முறைப்படுத்தி சிறப்பினமாக தக்க ஆணைகள் பிறப்பிக்குமாறு நகராட்சி ஆணையர் கோரியுள்ளார் என நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரை மற்றும் உயர்நீதி மன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பின் அடிப்படையிலும் விருதுநகர் நகராட்சியில் பதிவுரு எழுத்தராக பணிபுரியும் திரு எஸ். மார்த்தாண்டன் என்பவரின் பணியினை 21.09.1995 முதல் வரன்முறை செய்யக் கோரும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று தனியரின் பணியினை வரன்முறைப்படுத்தலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை – 108.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை.
நகராட்சி ஆணையர், விருதுநகர் நகராட்சி.

நகல்:–

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்